★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 29உ-புதன் (14—11—56) ★ ★ வெளியூர்: ஐப்பசி 30உ வியாழன் (15—11—56) [இதழ் 134

50 ஆயிரம் பேருக்கு ஒரு டாக்டர்

"கொள்ளை நோய்கள் பலவற்றிற்கு நாட்டு மக்கள் ஆளாகித் தவிக்கின்றனர்: ஆனால் இந்தக் கொள்ளை நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு நம்மிடையே உள்ள வசதிகள் மிகக் குறைவு.

"சராசரியாக, 6,000 பேருக்கு ஒரு வைத்தியர்தான் நம்மிடத்தில் உண்டு.

"இந்த வைத்தியர்களில் பெரும்பகுதியினர் பெருநகரங்களிலும் பேரூர்களிலுமே வாழ்கின்றனர்.

"எனவே, கிராமங்களில் வாழும் மக்கள் 30,000 முதல் 50 ஆயிரம் பேருக்கு ஒரு வைத்தியரின் சேவையைத்தான் பெற முடிகிறது," என்று மத்திய சுகாதார மந்திரி இராஜகுமாரி அமிர்த கௌரி, கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

வடநாடு-தென்னாடு பேதம் இல்லையா?

தென்னாட்டில் வடவரின் ஆதிக்கம் இல்லையா?

மந்திரிகளுக்கு அண்ணா தரும் பதில்

'வசை பாடுவதால் பலியாகிவிட மாட்டோம்'

வடநாட்டு ஆதிக்கத்தை ஒழிப்பதே நம் இலட்சியம்

தஞ்சை தி. மு கழகக் கூட்டத்தில் அண்ணா முழக்கம்

சமீப காலமாக, சென்னை மதிமந்திரிகள் 'மூவர்' நமது கழகத்தைப்பற்றி செல்லுமிடமெல்லாம் இழித்தும் பழித்தும் பேசுவதோடு 'வடநாடு—தென்னாடு பேதம் பேசுவது அபத்தம்' என்று வேறு பேசிடக் கிளம்பியுள்ளனரல்லவா?

அந்த மதிமந்திரிகளுக்குப் பதில்தரும் வகையில், தஞ்சைக் கூட்டம் ஒன்றில் பேசும்போது அண்ணா அவர்கள் எடுத்துரைத்த கருத்துக்களின் சாரத்தைக் கீழே தருகிறோம் :—

"நம்முடைய மாநில மந்திரிகள்--சுப்பிரமணியம் போன்றார், 'வடநாடு--தென்னாடு என்கிற பேதமே இல்லை' என்கின்றனர்.

"உண்மையில், வடநாடு—தென்னாடு பேதம் இல்லையா?

"இந்த நிதியமைச்சர் சுப்பிரமணியம், சென்னைக்கு இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 400 கோடியேனும் வேண்டும் என்று டெல்லிப் பெரியவர்களிடம் காவடி எடுத்துச் சென்றார். படாத பாடுபட்டதாகக் கூறினார். ஆனால் டெல்லி சர்க்காரோ, ரூ. 170 கோடிக்குமேல் அனுமதிக்கமுடியாது என்று கூறி அவரைத் திருப்பி அனுப்பிவிட்டனர்.

"இந்த நிதியமைச்சருக்கு டெல்லியில் எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பதை இந்தச் சம்பவம் காட்டவில்லையா?

"இந்த நாட்டிற்கான அபிவிருத்தித் திட்டத்தை அங்கீகரிக்க வேண்டியவர்கள் டில்லியிலிருக்கிறார்கள் என்றால், அது இந்த நாட்டில் டில்லியின் ஆதிக்கம் இருக்கிறது என்பதைக் காட்டவில்லையா?

"ரூ. 6,000 கோடிக்கும் அதிகமாகச் செலவிடப்படவிருக்கும் திட்டத்தில் தென்னாட்டிற்கு ரூ. 170 கோடிதான் என்றால், இது எதைக் காட்டுகின்றது? வடநாடு—தென்னாடு பேதம் நிலவுகிறது என்பதைக் காட்டவில்லையா?

"தென்னாட்டில், ஒரு தொழிலைத் துவங்க வேண்டுமானால், அதற்கு இங்குள்ள சர்க்காரிடத்தில் அதிகாரமில்லை; அதிகாரம் படைத்தவர்கள் டில்லியில் இருக்கிறார்கள். அவர்களோ, தென்னாட்டில் தொழில் துவங்க அனுமதி தருவது சுலபமல்ல! இந்த நிலை ஏன்? நமது நாட்டில் தொழில் துவங்குவதற்குரிய அதிகாரம் நமக்கு இல்லை என்பதின் மூலம், நம் மீது டில்லியின் ஆதிக்கம் இருக்கின்றது என்பது தெரியவில்லையா?

"வடநாட்டில் பெரும் தொழிற்சாலைகளையும் துவங்கி, வளர்த்து, அங்கு உற்பத்தியாகும் பொருள்களை இந்த நாட்டு 'மார்க்கெட்'டிற்கு அனுப்புகிறார்கள்; ஆனால், இந்தத் தென்னாட்டிலிருந்து வடநாட்டு 'மார்க்கெட்'டிற்கு எந்தப் பொருள்கள் செல்கின்றன? ஏதுமில்லையே!

"இப்படி, வடநாடு தென்னாட்டின் செல்வத்தைச் சுரண்டி சோலைவனமாகிறது; தென்னாடு செல்வமிழந்து பாலைவனமாகிறது. இந்த நிலை ஏன்?

"தேவிகுளம், பீர்மேடு முதலிய தமிழ்ப் பகுதிகளை தமிழகம் இழந்திருக்கிறது. 'எவை போனாலும் கவலை இல்லை; தம் பதவிகள் மட்டும் போய்விடக் கூடாது' என்று கருதிக் கொண்டு ஆட்சி பீடத்திலிருக்கும் சுப்பிரமணியம் போன்ற மந்திரிகள், 'வடநாடு - தென்னாடு பேதம் ஏதும் இல்லை' என்றுதான் பேசுவார்கள். வேறெப்படிப் பேசுவர்?

"இவர்கள், நம்முடைய கழகத்தைப் பற்றி, போகிற இடங்களில் எல்லாம் வாய்க்கு வந்தபடி வசை பாடுகின்றனராம்.

"தேர்தல் நெருங்க நெருங்க சென்னை மந்திரிகளின் வசை புராணம் அதிகமாகலாம்; ஆனால் இதற்கு நாம் பலியாகிவிட மாட்டோம் என்பதை அவர்கள் உணரட்டும்"

என்று அண்ணா அவர்கள் தஞ்சை திலகர் திடலில் 10-11-56 அன்று நடைபெற்ற தி.மு.கழகப் பொதுக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

தோழர் எஸ். பெத்தண்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அந்தப் பொதுக்கூட்டத்தில், தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் என். எஸ் இளங்கோ, துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் ஆகியோரும் பேசினர்.

ஐ.நா. ஆற்றவேண்டிய பணிகள் பல உள!

ஐ. நா. பொதுச்சபையின் புதிய தலைவர் கருத்து

சயாம் நாட்டு வெளி விவகார மந்திரி இளவரசர் வான் வாய்தயாகன் இந்த ஆண்டிற்கு ஐ. நா. பொதுச்சபையின் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

ஐ நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர்களான அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்சு, சீனா ஆகியவையும், இந்தியா, எல்சால்வடார் ஆகியவையும் துணைத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரியவருகிறது.

"உலகில் மீண்டும் ஓர் அணு யுத்தம் தோன்றுமோ என்ற அச்சம் மக்களை வாட்டும் ஒரு இருண்ட சூழ்நிலை உருவான போது, ஐ. நா. நம்பிக்கை ஒளியூட்டி, இருளை அகற்றியிருக்கிறது; தொடர்ந்து அது ஆற்ற வேண்டிய பணிகள் பல உள," என்று, புதிய தலைவர் வாய்தியாகன் கூறியிருக்கிறார்.

சென்னை போலீஸ் அதிகாரியைத் தாக்கிய மார்வாடி வியாபாரி

நான்குமாத சிறை தண்டனை விதிக்கப்பட்டார்

சென்னை, நவ. 13—

தனது வேலையைச் செய்ய முற்பட்ட சென்னை போலீஸ் அதிகாரி ஒருவரை குஜராத்தி வியாபாரிகள் சிலர் சேர்ந்து தாக்கியதாக நடைபெற்ற வழக்கில், ஒரு குஜராத்தி வியாபாரிக்கு நான்கு மாதக் கடுங்காவல் தண்டனை தந்து தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

வழக்கும் சம்பவமும்

சம்பவம் பற்றியும் வழக்கு பற்றியும் கூறப்படுவதாவது :—

கடந்த செப்டம்பர் 4-ந் தேதியன்று, தங்கராசன் என்ற குற்ற இலாகா போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர், நைனியப்ப நாயக்கன் தெருவில் உள்ள ஹசரிமால் என்ற மார்வாடியின் கடைக்குச் சென்று, திருட்டுப்போன சாமான்கள் பற்றிய வழக்கு ஒன்றிற்குத் தேவைப்பட்ட பட்டியல் புத்தகம் ஒன்றைக் கைப்பற்றியிருக்கிறார்.

இந்தப் புத்தகத்தைப் போலீஸ் அதிகாரி எடுத்துச் செல்வதைத் தடுத்தாராம், அந்த மார்வாடி வியாபாரி!

அதிகாரி, புத்தகம் பெற்றுக் கொண்டதற்கான இரசீது தருவதாகக் கூறியதையும், கடைக்கு வந்திருந்த சிலர் தடுத்ததையும் மார்வாடி பொருட்படுத்தாமல், அதிகாரியிடமிருந்து பலாத்காரமாகப் புத்தகத்தைப் பறிமுதல் செய்ய முயற்சித்தாராம்.

'மாரோ! மாரோ!'

ஊர்வலம் ஒன்று அப்போது தெருவழியே சென்றதாம்; அந்த மார்வாடி உடனே கடையைவிட்டு வெளியே சென்று, 10 குஜராத்திகளைக் கூட்டிவந்தாராம்; அவர்கள் அனைவரும் 'மாரோ, மாரோ,' (அடியுங்கள்—தாக்குங்கள்) என்று கூறிக்கொண்டு, அதிகாரியைத் தாக்கிப் படுகாயப் படுத்தினராம். அதிகாரி தன்னைக் காப்பாற்றிக்கொள்ள இரண்டொரு பதிலடி தந்துவிட்டு, கூட்டத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் ஏறிச் சென்றாராம்.

மார்வாடி வியாபாரியும் இதரரும் சேர்ந்து ஒரு பித்தளைத் தடியால் அதிகாரியின் மார்பிலும், தலையிலுமாக அடித்துக் காயப்படுத்தினராம்.

சட்டையும் பனியனும் கிழிந்த நிலையில் காயங்களுடன் அதிகாரி தப்பிச் சென்றிருக்கிறார்.

இந்த வழக்கை ஒட்டி ஏழு சாட்சியங்களையும் விசாரித்துவிட்டு நான்காவது பிரதம மாகாண நீதிபதி மேற்கண்டவாறு மார்வாடி வியாபாரிக்குத் தண்டனை தந்து தீர்ப்பளித்திருக்கிறார்.

நடிப்பிசைப் புலவருக்கு சென்னையில் மகத்தான வரவேற்பு

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கண்கொள்ளாக் காட்சி

மலர்மாலைகளுக்கிடையே நண்பர் கே. ஆர். இராமசாமி

ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டுவந்து வரவேற்றனர்

சென்னை, நவ. 14—

நடிப்பு-இசைப்புலவர் கே.ஆர். இராமசாமி அவர்கள், மலாயா, சிங்கப்பூர் நாடுகளில் வெற்றிகரமான சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று மாலை சென்னை வந்து சேர்ந்தார்.

சிங்கப்பூரிலிருந்து விமான மூலம் தாயகம் திரும்பிய நண்பர் இராமசாமி அவர்களுக்கு, விமான நிலையத்தில் மகத்தானதோர் வரவேற்பு அளிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்தின் சார்பிலும் 'நம் நாடு' சார்பாகவும் தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் மலர் மாலை அணிவித்து வரவேற்றார்.

மக்கள் தந்த மகத்தான வரவேற்பு

'நடிப்பு-இசைப் புலவர், மலாயா, சிங்கப்பூர் நாடுகளில் தமிழகத்தின் கலைத் தூதுவராகச் சென்று, பகுத்தறிவூட்டும் சிறந்த நாடகங்கள் பலவற்றைச் செவ்வனே நடித்து, ஆங்குள்ள மக்களுக்கு மகிழ்ச்சியூட்டியதோடு, புரட்சிக் கருத்துக்களையும் நல்கி வெற்றிகரமானதோர் கலைப்பணியாற்றிவிட்டுத் தாயகம் திரும்புகிறார்' என்ற செய்தி, ஆயிரக்கணக்கில் கழகத் தோழர்கள், பொதுமக்கள், மாணவர்கள், மகளிர், கலைஞர்கள் முதலிய பலரையும், விமான நிலையத்தில் அவரை வரவேற்பதற்காகக் காத்திருக்கச் செய்தது.

மாலை 5-15 மணிக்கு விமானம் வந்துசேர்ந்ததும் கதவுகள் திறக்கப்பட்டன; நடிப்பிசைப்புலவர் விமானத்திலிருந்து வெளியே வந்தார்; கூடியிருந்த ஆயிரக்கணக்கானோரும் பெரும் ஆரவாரம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர். நடிப்பிசைப்

(4-ம் பக்கம் பார்க்க)

நடிப்பிசைப் புலவரை வரவேற்று அண்ணா தந்தி

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள், மலாயா, சிங்கப்பூர் சுற்றுப் பயணத்தை முடித்துத் தாயகம் திரும்புகிறார் என்ற செய்தியறிந்த அண்ணா அவர்களும் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் ஆகியோரும், நடிப்பு-இசைப் புலவரை மகிழ்ச்சியோடு வரவேற்று, திருச்சியிலிருந்து தந்தி அனுப்பியிருந்தனர்.

நம் நாடு
தி.மு.கழக இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 14—11—'56 புதன்

மொழிவழியும் திராவிட நாடும்

தனிச் சுதந்திரம் கொண்ட திராவிட நாட்டை அமைப்பது தான் நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படை இலட்சியமாகும். மொழிவழி பிரிந்து, கூட்டாட்சியில் ஒன்றாக இணைவது அவ்வுயரிய இலட்சியத்தின் உள்ளடக்கமாகும்.

மொழிவழியாகப் பிரிந்து அமைவதும், அவ்வாறு பிரிந்தவை மீண்டும் திராவிடக் கூட்டாட்சியில் இணைந்து செயல்பட முந்துவதும், நாம் காண விரும்பும் திராவிடக் கூட்டாட்சி அமைப்பின் இலட்சணமாகும்.

கூட்டாட்சி என்பது, குறிப்பிட்ட ஒரு கூட்டில் இணையும் தனித்தனி அமைப்புகளின் விருப்பின்வழி நிறைவேறக் கூடியதாகும். பலம் பொருந்திய ஒரு அமைப்பு, தன்னுடன் இணைந்து வாழ விரும்பாத மற்றொரு அமைப்பை, தனது பலத்தின் துணைகொண்டு வலுக்கட்டாயமாக அணைத்துக்கொள்ளுவது என்ற முறை, சிறந்த கூட்டாட்சிக்கு முரண்பட்டதாகும். அத்தகு இணைப்புக்குக் கூட்டாட்சி அமைப்பு என்ற பெயர் பொருந்தாது.

கூட்டாட்சி அமைப்புக்கு, நடைமுறையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள மற்றொரு இன்றியமையா இலட்சணமும் உண்டு. அதாவது, குறிப்பிட்ட கூட்டாட்சியில் இணைந்து வாழ முதற்கண் ஒப்பி, சில ஆண்டுக்காலம் கூடி இருந்து மீண்டும் கூட்டிலிருந்து விலகி தனித்துச் செயல்பட விரும்பினால், அவ்வாறு தான் விரும்பியவண்ணம் பிரிந்துசெல்வதற்கும் உரிமை இருந்தாக வேண்டும். அத்தகு பிரிந்து செல்லும் உரிமையை ஏற்றுக்கொண்டிருப்பதில்தான், கூட்டாட்சியின் வலிவும் பொலிவும் அடங்கியிருக்கின்றன.

குறிப்பிட்ட கூட்டாட்சியில் சில நாள் இணைந்திருந்து, பின்னர் பிரிந்து தனித்து நின்று, அவ்வாறு தனித்து வாழ்வதால் நலங் காணாது, மறுமுறையும் அதே கூட்டில் இணைய குறிப்பிட்ட அரசு முன்வருமானால், அப்பொழுதும் இணைத்துக் கொள்ளும் வாய்ப்பு அக்கூட்டாட்சிக்கு இருந்தாக வேண்டும். இத்தகு உயர்ந்ததோர் கூட்டாட்சியாக திராவிட நாடு மலர்ந்து மணம் வீச வேண்டும் என்பதுதான் நமது கழகத்தின் குறிக்கோள்.

திராவிடநாடு கோரிக்கையை, இந்தக் கூட்டாட்சி முறையைத் தொடர்புபடுத்தித்தான் நமது தலைவர்கள் கருதத் தொடங்கினர். தமிழ் மக்களின் பலத்தைக் கொண்டு, மற்றத் திராவிட மொழி வழி வந்த மக்களை அவர்கள் கருத்துக்கு மாறாக, ஒரு ஆட்சிக்குள் பிணைத்துப் போடுவது என்ற நச்சு நினைப்பில், நமது தலைவர்கள் திராவிடநாட்டு அமைப்பை நோக்கவில்லை.

திராவிடநாடு அமைப்பில் அடங்கியுள்ள கூட்டாட்சி முறையைப் பின்னணியாகக் கொண்டுதான், இந்தியப் பேரரசின் ஆணைக்கொப்பத் திருத்தி அமைக்கப்பட்டுள்ள மாநில ஏற்பாடுகள் திராவிடநாடு இலட்சியத்திற்கு ஊறு தேடுவதாக இருக்கிறதா அல்லது அரண் செய்வதாக இருக்கிறதா எனக் கண்டறியும் ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டும். அவ்வகையில் ஆராய்ந்து முடிவு காண்பதை விடுத்து, புதிய மாநில ஏற்பாடுகள் திராவிடநாடு கோரிக்கையைக் கொலை செய்துவிட்டது எனக் கூறுவது, திராவிடநாடு அமைவதைத் தாங்கள் விரும்பவில்லை என்பதை விளக்கிக் கூறுவதாக இருக்க முடியுமே அல்லாது, திராவிடநாடு கொலை செய்யப்பட்டுவிட்டது என்ற தங்கள் கூற்றுக்குத் தகுந்த விளக்கம் தந்ததாக ஆகாது. நிற்க,

திராவிட நாடு கூட்டாட்சி மொழிவழி பிரிந்தாக வேண்டும் என்று முன்னர் குறிப்பிட்டோம். திராவிடநாடு அமைந்தவுடன், அதற்கென அரசியல் அமைப்பை உருவாக்கும் கட்டத்தில், மொழிவழிப் பிரிவினைக்கு அடிகோலுவதே முதற்பணியாக மேற்கொள்ளப்பட்டாக வேண்டும். அப்பொழுது, அந்தக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பெரும் பணியைத்தான், இந்தியப் பேரரசு இப்பொழுதே வேண்டாவெறுப்பாக மொழிவழியில் திராவிடத்தை நான்கு கூறுகளாகப் பிரித்திருக்கிறது.

மேலும் சிலநாள் சென்ற பிறகு, திராவிடமக்களாக முன்வந்து செய்துகொள்ள வேண்டிய மொழிவழி ஏற்பாட்டை அவர்கள்சார்பில்இப்பொழுதே இந்தியப் பேரரசு செய்து முடித்திருக்கிறது. திராவிட மக்களின் கடமைகளில் ஒன்றான மொழிவழிப் பிரிவினையை தானாக வலியவந்து இந்தியப் பேரரசு இப்பொழுதே செய்துவிட்டதின்மூலம்,நமது பொறுப்பான கடமைகளில் ஒன்று குறைந்துவிட்டது என நாம் மகிழ வேண்டும். அதைவிடுத்து இந்தியப் பேரரசு, வேண்டாவெறுப்பாகவும் அரைகுறையாகவும் செய்து முடித்துள்ள மொழிவழி ஏற்பாட்டால் திராவிடநாடு இலட்சியம் நிர்மூலமாக்கப்பட்டுவிட்டது எனப் பிதற்றக் கிளம்புவது, தங்களுடைய அரசியல் அறியாமையைக் காட்டிக்கொள்வதாகும் என்பதுடன், தங்களை நெருங்கி வரும் அரசியல் இருள்கண்டு அலறித் துடிப்பதையும் தெளிவுபடுத்திக்கொள்வதாகும்.

திராவிடநாடு அமைப்புக்கு எல்லை எது—வரம்பு யாது என, வேறு நியாயமான முறையில் நமது இலட்சியத்தைக் குறைகூற இயலாத நிலையிலிருக்கும் சிலர், குதர்க்கம் பேசிவந்தனர். அவர்கள் வாயடைத்துப் போகும்வகையில், மொழிவழி அமைப்புகளின் எல்லை வரம்புகளுடன், திராவிடநாட்டின் நில அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள். இது கண்டு நமது கழகம் பூரிப்படையத் தேவை இல்லையானாலும், எரிச்சல் அடைவதற்கு ஒன்றுமே இல்லை.

நாம் கோரும் திராவிட நாட்டின் நிலப்பரப்பை, இந்தியப் பேரரசு திட்டவட்டமாகச் செப்பனிட்டு விட்டிருக்கிறது. அதை முழுச் சுதந்திரத் தனியரசாக்குவதும், அவ்வாறு ஆக்கப்பட்ட அரசைத் தங்களுக்கு விருப்பமான கூட்டாட்சியாக அமைத்துக் கொள்ளுவதும், இனி திராவிடப் பெருங்குடி மக்கள்மீதுசார்ந்துள்ள பெரும் பொறுப்பாகும். மக்கள் சக்தி என்றும் பட்டுப் போகாதது என்ற பேருண்மையைத் தெரிந்திருக்கின்ற நாம், திராவிட நாடு பெறுவது கானல் நீர் தேடுவது போன்றது என நாம் எண்ணிடத் தேவை இல்லை—எண்ணிடப் போவதுமில்லை. மக்கள் சக்தியின் பேராற்றலிலும், தம்முயற்சி வலியிலும் நம்பிக்கையற்று, பிறரிடமிருந்து இரந்து பெறும் பலத்தை மட்டுமே நம்பி அரசியல் துறையில் ஆடிக்கிடப்பவர்கள் வேண்டுமானால், திராவிடநாடு கானல் நீருக்குச் சமமானது என உருப்போட்டுக் கொண்டு, அற்ப மகிழ்ச்சியைப்பெற்று, தங்கள் அரசியல் கூத்தைத் தொடர்ந்து ஆடிக்கிடக்கட்டும். அந்தத் தனி மனித உரிமையைக் காத்து வளர்ப்பது நமது கழக இலட்சியத்திற்கு உடன்பாடுடையதேயாகும்.

அண்ணாமலைநகர் மாணவர் அரும்பணி

தேர்தல் நிதிக்கு ரூ. 1,011 அன்பளிப்பு

அண்ணா, என். வி. நடராசன் பாராட்டு

அண்ணாமலைநகர் தி. மு. கழக மாணவர் கிளையின் சார்பில் 10—11—56 காலை 9-30 மணிக்கு, ராசா டாக்கீசில் தேர்தல் நிதிக்காகச் சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஏராளமான மாணவர் தோழர்களும், பொதுமக்களும் வருகை தந்து சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில், 'தேர்தல் நிதிக்காக ரூ. 500 தருகிறோம்' என்று வாக்களித்திருந்த மாணவர் கிளையினர், அன்று ரூ. 1,011 அண்ணா அவர்களிடம் அளித்ததோடல்லாமல், மேலும், எந்தச் சமயத்தில் அண்ணா அவர்கள் உத்திரவிட்டாலும் தொடர்ந்து நாங்கள் அதனை நிறைவேற்றத் தயாராயிருக்கிறோம்' என்று அண்ணாமலைநகர் தி. மு. கழக மாணவர் கிளையின் சார்பில் செயலாளர் து. சோமசுந்தரம் அறிவித்தபோது, கூடியிருந்த அனைவரும் பேரார்வத்துடன் கை தட்டுதலின் மூலம் தங்களின் உறுதிப்பாட்டைக் காட்டியது குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சிறப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குமாறு மாணவத் தோழர்கள் க. பாலகிருஷ்ணன் முன்மொழிய, டி. இராமசாமி வழிமொழிய தெ. ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் தலைமை வகித்து, அரசியலார் தமிழ் நாட்டிற்கு இழைத்துவரும் கொடுமைகளையும், சட்டசபை நடவடிக்கைகளையும் எடுத்துக்காட்டினார்.

அடுத்துத் தோழர் தில்லை—வில்லாளன் அவர்கள், கழகத்தின் கடந்த ஏழாண்டுக்கால பணியினை விளக்கிப் பேசினார்.

பின்னர், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"திராவிட முன்னேற்றக் கழகம், 150 தொகுதிகளில் போட்டியிடப்போகிறது என்று அண்ணா அவர்களால் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து, அமைச்சர்களுக்கும், அவர்களைத் தாங்கி நிற்பதாகக் கருதிக் கொண்டிருப்பவர்களுக்கும் உண்டான காய்ச்சல், மேலும் அதிகமாகி சில நேரங்களில் தேர்தல் ஜன்னிகூடப் பிடித்து ஏதேதோ அவர்கள் கூச்சல் போட்டுத் திரிவதாகப் பத்திரிகைச் செய்திகள் அறிவிக்கின்றன.

"சில நேரங்களில், இதே அமைச்சர்களும் 'ஏனையோரும், 'தி. மு கழகத்திற்குப் பணபலம் ஏது? நாம் ஒருகை பார்க்கலாம்' என்றும் கனவு காண்கிறார்களாம். இவ்வாறு நம்மைப் பற்றியும் நமது கழகத்தின் சக்தியைப் பற்றியும் சரிவரப் புரிந்துகொள்ளாதவர்களும், புரிந்துகொண்டாலும் மனவளம் இல்லாத காரணத்தால் உண்மையை மறைத்துவிட்டுக் கண்டவாறு பேசித் திரிவோருக்கும் நாங்கள் ஒரு உண்மையை நினைவூட்ட விரும்புகிறோம்.

"அதென்னவெனில், திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்டபோது, மொத்தமாக ஆயிரமோ பத்தாயிரமோ பொருளை வைத்துக்கொண்டு அண்ணா அவர்கள் பணியாற்றத் துவங்கினாரில்லை கழகத்தின் ஒப்புயர்வற்ற கொள்கையினையும், தோழர்களின் உறுதிபடைத்த ஒத்துழைப்பையும், பொதுமக்களின் பேராதரவையும் நம்பியே பணியாற்ற முற்பட்டார்கள். நம்மை அன்று ஏளனம் செய்தவர்கள்—ஏதேதோ ஆரூடம் கணித்தவர்கள் இன்று நமது கழக வளர்ச்சியைக் கண்டு மனம் பொறாதவர்களாய் வேதனைப்படுகின்றனர். இவர்களெல்லாம் விரைவில் நற்பண்பு பெற வேண்டுமென்பதே எங்களின் எண்ணமாகும்.

"அன்று நாம் ஆதரவற்ற நிலையில் நமது பணியினைத் துவக்கினோம். இன்று பொதுத் தேர்தலில் 150 தொகுதிகளில் போட்டியிடும் அளவுக்கு நமது கொள்கை வளர்ந்திருப்பதைக் காணுகிறோம். அதுபோலவே, '150 தொகுதிகளில் கழகம் போட்டியிட நமக்குப் பண பலமேது' என்று எண்ணுபவர்களுக்கு அறிவூட்டும் வகையிலும், நமது பொதுச்செயலாளரின் வேண்டுகோளை நிறைவேற்றும் பொறுப்பிலும் மாணவத் தோழர்களாகிய நீங்கள் ஆவன செய்ய முற்பட்டிருப்பதைக் கண்டு உற்சாகமடைகிறோம்.

"ஆளும் வர்க்கம் பண சக்தியைக்கொண்டு நமது முயற்சியைச் சிதறடித்துவிடலாம் என்று எண்ணினால், அந்த ஆணவத்தைத் தகர்த்தெறிய ஏராளமான பண பலத்தையும் அதைவிட பெரும் அளவுக்கு உங்களின் நற்பண்பினையும், கடமை ஆற்றும பெருந்தன்மையையும் எடுத்துக் காட்டியிருக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதுடன், மேலும் தேர்தல் நிதிக்கு அவ்வப்போது உதவி அளித்து வருமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுவிட்டு, மாநிலப் புது அமைப்புப் பிரச்சினையில் காமராஜ் சர்க்கார் செய்துள்ள துரோகங்களையும் விளக்கிப் பேசினார்.

இறுதியாக அண்ணா அவர்கள் அண்ணாமலைநகர் தி. மு. கழக மாணவர் கிளையின் அரும்பணியைப் பாராட்டியும், பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டது ஏன் என்பதை விளக்கியும், தாயகத்தின் விடுதலைப் பணியில் பிறகட்சிகளுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உள்ள வேறுபாடுகளையும், தி. மு. கழகம் ஒரு கட்சியல்ல—தேசிய விடுதலை இயக்கம் என்பதை மிக விரிவாக விளக்கியும் காமராசர் ஆட்சியினர் ஐந்தாண்டுத் திட்டங்களில் தமிழ் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய பங்கீட்டைப் பெறக் கூடத் தகுதியற்றவர்களாகயிருப்பதுடன், அதனைச் சுட்டிக்காண்பித்து, நேரு சர்க்காரை வற்புறுத்துமாறு அறிவித்தும் நம் கழகத்தைப் பற்றி இழித்தும் பழித்தும் பேசும் விசித்திர நிலையையும், தேவிகுளம், பீர்மேடு போன்ற பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்படவும் தமிழ் நாடு எனப் பெயரிடப்பட வேண்டும் என்ற பிரச்சினைகளுக்கான முயற்சியில் நாம் ஈடுபட்டு, மக்களின் சக்தியைத் திரட்டித் தந்தும் அதனைப் பயன்படுத்தத் தவறியதோடல்லாமல் தியாகி சங்கரலிங்கனார் உயிரிழக்க வேண்டிய அநீதிகள் நடைபெறும் அளவுக்கு இந்த சர்க்கார் பொறுப்பற்ற தன்மையில் இருந்து வருவதையும் விவரித்துப் பேசினார்கள்.

மற்றும், அண்ணாமலை நகர் மாணவர் கிளையினர் ரூ. 1,011 தேர்தல் நிதிக்காகத் தந்ததைப் பற்றி மனமாரப் பாராட்டுகையில், 'சென்னையிலுள்ள மாணவர் கிளை ரூ. 1,000 தந்திருந்தது; ஆனால், அண்ணாமலை நகர் மாணவர் கிளைத் தோழர்கள் ரூ. 1,011 தேர்தல் நிதிக்காகத் தந்திருப்பது ஒருவகையில் மகிழ்ச்சியும், மற்றொரு வகையில் கொஞ்சம் வெட்கமும் அடைகிறேன். ஏனெனில், நான் கல்வி பயின்றது பச்சையப்பன் கல்லூரி. ஒருக்கால், நமது பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில கல்வி பயின்று தேர்ந்தவராதலால் நீங்களெல்லாம் கூடி சதி செய்து இப்படி ரூ. 1,011 கொடுத்து வெற்றிக் களிப்பில் மூழ்கினீர்களோ என்றுகூட எண்ணுகிறேன். எப்படியிருந்தாலும் கழகம் உங்களைக் கேட்கும் சமயங்களில் அண்ணாமலைநகர் தி. மு. கழக மாணவர் கிளைத் தோழர்களாகிய நீங்கள் உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் மாணவர்களையும், நடுத்தர மக்களையும், பாட்டாளித் தோழர்களையும் கேட்காமல் வேறு யாரிடம் உதவி கோரும்? நீங்கள்தான் எங்களுக்குப்

(3-ம் பக்கம் பார்க்க)

திருச்சி தி. மு. கழக மாணவர் கிளை

பொதுத் தேர்தல் நிதிக்காக

ரூ. 750 உதவி

11—11—56 அன்று திருச்சியில் நடைபெற்ற திருச்சி தி. மு. கழக மாணவர் கிளையின் சிறப்புக் கூட்டத்தில் அண்ணா அவர்களிடம் தேர்தல் நிதிக்கு ரூ. 750 அளிக்கப்பட்டது.

முதலில் கூறியது 500; ஆனால் கூட்டத்தில் தந்தது ரூ. 750.

(விவரம் பின்னர் வெளிவரும்)

நாகார்சுனசாகர்திட்டம்

ஆந்திராவுக்கு டில்லி தரும் கடன்

புதுடில்லி, நவ 12—

நாகார்சுன சாகர் திட்டத்திற்காக, டில்லி சர்க்கார் இதவரை ரூ 149 இலட்சம் கடன் கொடுத்திருப்பதாயும், இப்போது மேலும் ரூ. 38 இலட்சம் கடன் வழங்கச் சம்மதித்திருப்பதாயும் தெரியவருகிறது.

ஆந்திர சர்க்கார் மேற்கொண்டுள்ள இந்த நீர்ப்பாசனத் திட்டம் ரூ. 85 கோடியில் பூர்த்தியாகும் என்றும் 54 இலட்சம் அடிபரப்புத் தண்ணீரைத் தேக்கி 21 இலட்சம் ஏருக்கு நீர்ப்பாசன வசதிதரும் என்றும் தெரியவருகிறது.

தெரிந்துகொள்ளுங்கள்!

இந்திய அரசாங்க விவசாய அமைச்சர் டாக்டர் பஞ்சாப் ராவ் தேஷ்முக் சர்வதேச அரிசி கமிஷன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

உலக மக்கள் தொகையில் பாதிக்கு மேல்—குறிப்பாகக் கீழ் நாடுகளில் அரிசிதான் முக்கிய உணவாகும்.

உலகில், 2 கோடி எக்கர் நிலப் பரப்பில் நெல் சாகுபடியாகிறது; சராசரி ஆண்டுக்கு 16 கோடி டன் அரிசி உற்பத்தியாகிறது.

இந்தியாவில் 7½ கோடி எக்கர் நிலத்தில் நெல் பயிராகிறது; வேறெந்த நாட்டைபும்விட இது அதிகம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 40 இலட்சம் எக்கர் நிலத்தில், ஜப்பானிய சாகுபடி முறை மேற்கொள்ளப்படுமாம்.

அண்ணாமலைநகர்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பொறுப்பாளிகள்; உங்களின் சக்திதான் எங்களுக்கு வழி காட்டி என்பதை மனப்பூர்வமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்றும் குறிப்பிட்டார்கள்.

☆

தலைக்குளத்தோழர்கள் நன்கொடை

இதுவரை காங்கிரசில் சேர்ந்திருந்த தலைக்குளம் ராசாங்கம், இராமு உள்ளிட்ட பல தோழர்கள் காங்கிரசிலிருந்து வெளியேறியதோடு, இச் சிறப்புக் கூட்டத்திற்கும் வந்திருந்து அக்கிராம மக்களின் சார்பில் தேர்தல் நிதிக்கு அண்ணு அவர்களிடம் ரூ 201 அளித்ததுடன் வரவேற்பும் வாசித்தளித்தனர்.

மற்றும் கோபால் பிரதர்ஸ் ரூ. 5; வீரசோழபுரம் குஞ்சிதபாதம் ரூ 10; கங்காதரன் 1011 காலணு பணமுடிப்பும் தந்தனர்.

அண்ணு அவர்களுக்கும் மற்ற தோழர்களுக்கும் கைத்தறி ஆடைகள், மலாமாலைகள் அணிவிக்கப்பட்டன

நாம் கோரும் திராவிடம்!



டெல்லியின் புதிய மாநிலச் சட்டப்படி அமைந்துள்ள தமிழகம், ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகிய நான்கு மொழிவழி மாநிலங்களும், நாம் கோரும் திராவிட நாட்டின் எல்லையை ஏறத்தாழ வரையறுத்து விட்டன; அந்த அமைப்பே மேலே காணப்படுவது.

—படம் அன்பளிப்பு: 'சுதந்திரம்'

எகிப்துக்குத் தொண்டர் படை

செல்லத்தென்கிழக்கு நேரு

புதுடில்லி, நவ. 12—

எகிப்திய இராணுவத்திற்கு உதவ எந்த காட்டிலிருந்தும் தொண்டர் படை செல்லும் என்று கான் கருதவில்லை,' என்று பண்டித நேரு தெரிவித்திருக்கிறார்.

ரஷ்யாவும், செக்கோஸ்லோவாக்கியாவும் தொண்டர்படை அனுப்பத்தயார் என்று அறிவித்திருப்பதுடன், எகிப்தினருடன் ரஷ்யத் தொண்டர் படையை ஏற்றுக்கொள்ளவும் தாங்கள் தயாராக விருப்பதாக எகிப்திய சர்க்கார் அறிவித்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

இஸ்ரேலை இந்தியா ஆதரிக்கவேண்டுமாம்

மகாசபைத் தலைவர் கூற்று

ஜோத்பூர், நவ. 11—

இஸ்ரேலை இடைவிடாது தாக்கி அதன் உரிமையைப் பாதிக்க முயற்சிப்பது அரபு நாடுகளான்; எனவே, பழிவாங்குவதற்காக இஸ்ரேல் எதிரிகளைத் தாக்கிச் சென்றதென்றும், இஸ்ரேலை 'ஆக்கிரமிப்பாளர்' என்ற உறவது தவறு என்றும், மத்தியக் கிழக்குத் தகராறில் இந்தியா இஸ்ரேலைத்தான் ஆதரிக்க வேண்டுமென்றும், இந்து மகா சபைத் தலைவர் வி. டி. சவர்க்கார், சபையின் வருடாந்திர மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

பார்மோசாவில் அபாய நிலை ஏற்படுமா?

நைப்பே, நவ. 12—

பார்மோசாவிலுள்ள சியாங் தற்காப்பு ஊழியர்கள், உடனடியாகத் திரட்டப்படுவதற்குத் தயாராக இருக்கிறார்களென்றும், எவ்வித அபாய நிலைமையையும் சமாளிப்பதற்கே இந்த முன்னேற்பாடு என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

விடுதலைக் கிளர்ச்சியாளர் மீது விமானத் தாக்குதல்

அல்ஜீரியாவிலுள்ள 'போன்' என்னும் இடத்திற்கு மேற்கில் இரண்டு நாட்களாக அல்ஜீரிய விடுதலைக் கிளர்ச்சிக்காரர்கள்மீது பிரெஞ்சு விமானம் தாக்குதல் நடத்தியுள்ளது. இதனால் 15 அல்ஜீரியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

எராளமான துப்பாக்கிகளும், தானே இயக்கும் ஆயுதங்களும், 100 கை வெடி குண்டுகளும் கைப்பற்றப்பட்டதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது

ஐ. நா.-வில் சீனாவிற்கு இடம் கிடைக்குமா?

நியூயார்க், நவ 12—

ஐ நா.-வில் தேசிய சீனாவுக்குப் பதில் பீகிங் சீனாவுக்கு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்று இந்தியா பிரேரேபணை செய்துள்ளது.

அறிவிப்பு

வ. ஆ. வேலூர் நகரில் யாரோ வேலு - செல்வராசன் என்பவர், தி. மு. க. தேர்தல் நிதிக்காக நாடகம் நடத்தப்போவதாகவும், அதற்கு அண்ணு அவர்கள் தலைமை தாங்கப் போவதாகவும், மேலும் தோழர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், இளம்வழுதி, ப. கண்ணன், கா. அப்பாதுரை ஆகியோரையும்படுத்தி வேறு பல நாடகங்கள் நடத்தப்போவதாகவும் அறிக்கைகள் வெளியிட்டுக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தேர்தல் நிதி நாடகம் நடத்தும்படி அண்ணருக்குத் தலைமைக் கழகமோ, அண்ணுவோ அனுமதியளிக்கவில்லை என்பதையும், அவரது நாடகங்களில் கலந்து கொள்ள மற்றவர்கள் யாரும் இசையவில்லை என்பதையும் இதன் மூலம் கழகத்தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வேலு-செல்வராசனின் தகாத முயற்சிகளுக்கு இடமளிக்க வேண்டாம என்று கழகத் தோழர்களையும், பொதுமக்களையும் தலைமை நிலையம் கேட்டுக்கொள்கிறது.

திராவிடத்தை மீட்க மேலும் ஓர் படைக்கலன்!

ஆங்கில வார ஏடு ஆரம்பமாகிறது

அண்ணுவை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும்

தித்திக்கும் செய்தி! திராவிடத்தை மீட்க மேலும் ஓர் படைக்கலன் கிடைத்துவிட்டதை அறிவிக்கும் செய்தி! ஆங்கில இதழ்—கழகத்தின் உன்னத விடுதலை இலட்சியத்தை—உயரிய கொள்கையை உலகுக்கு அறிவிக்க, சகோதரராம் ஆந்திரரும், கேரளரும், கன்னடரும் உணர்ந்து ஒன்றுபட்டுக் குரல் எழுப்ப ஓர் ஆங்கில இதழ், 'ஹோம் லண்ட்' (Home Land) தவங்கப் படவிருக்கிறது, வரும் ஜனவரித் திங்களில் என்ற செய்தி, தித்திக்கவில்லையா? அண்ணு அவர்களே ஆசிரியராயிருந்து பணியாற்றுவரும் அந்த இதழில்!

கட்டுரை, கவிதை, கதை, கடிதம், உரையாடல் முதலிய வடிவங்களில் அண்ணுவின் ஆங்கில எழுத்தோவியங்களை, 'ஹோம் லண்ட்' தாங்கி வரும்.

ஆண்டுச் சந்தா ரூ. 7 செலுத்தி, எடு எழில் பெறவும், எண்ணம் நடேறவும் ஆதரவு நல்குமாறு தோழர்கள் கேட்கப்பட்டிருக்கின்றனர்.

இதழ் துவங்குவதற்கான அனுமதி கிடைத்துவிட்டது. ஆரம்ப வேலைகள் துவங்கிவிட்டன!

★★★★★★★★★-★★★-★★★★

'ஹோம்லண்ட்'

[HOME LAND]

துவக்கத்திற்கு

★

அண்ணுமலைநகர் தி. மு. கழக மாணவர்

கியூவின் முதல் நன்கொடை

10-11-56 அன்று அண்ணுமலை நகரில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், அண்ணுமலை நகர் தி. மு. கழக மாணவர் கியூவின் சார்பில் அதன் செயலாளர் து சோமசுந்தரம் அவர்கள் ரூ 100 அண்ணு அவர்களிடம் கொடுத்ததுடன் மேலும் தர இருக்கிறோம் என்று கூறினர். அண்ணு அவர்கள், மாணவர் கியூக்கு நன்றி தெரிவித்தார்கள்.

HOME LAND—ஆங்கில வார இதழ் துவக்கத்திற்கு முதன் முதலாக அளிக்கப்பட்ட நன்கொடை இதுவேயாகும்.

★★★★-★★★★-★★★★★★★★

பூதானமாகக் கிடைத்த 1,200 கிராமங்கள்

சீர்திருத்தி அமைக்கத் திட்டம்

ரூ.1கோடி செலவில் கைத்தொழில்கள் வளர்க்கப்படுமாம்

கட்டாக், நவ. 12—

ஆச்சாரியா வினோபா பாவே ஒரிசா வந்திருந்தபோது அவரிடம் பூதானமாகத் தரப்பட்ட 1,200 கிராமங்களையும் அபிவிருத்தி செய்து சீர்திருத்துவதற்கான திட்டம் ஒன்றை சர்வ சேவா சங்கம் தீட்டியுள்ளதாம். இந்த 1,200 கிராமங்களும், ஒரிசா மாநிலத்தில் கோராபுட் மாவட்டத்தில் உள்ளவையாம்.

சர்வோதயக் கொள்கைப்படி இந்தக் கிராமங்கள் எல்லாம் ஐந்து கால வசதிகளோடு உருவாக்கப்படுமாம்!

இரண்டாம் திட்ட காலத்தில் இந்தக் கிராமங்களில் கைத்தொழில்களை வளர்ப்பதற்காக ஒரு கோடி ரூபாய்வரையில் செலவிடவும் சர்க்கார் முயற்சிக்குமாம்.

அகில இந்திய சர்வசேவா சங்கத்தின் செயலாளரான அண்ணு சாகிப் சகஸ்ரபுதே என்பார் இந்த பூதான கிராமங்களின் புனர் நிர்மாணத் திட்டத்தின் பொறுப்பாளியாயிருப்பாராம்.

போட்டியல்லவாம்!

கல்கத்தா, நவ. 13—

'மாலேப் போலீசு படைக்குப் போட்டியாக அமைந்தல்ல, இரயில்வே பாதுகாப்புப் படை' என்று இரயில்வே மந்திரி சாஸ்திரி அறிவித்திருக்கிறாராம்!

கோடீசுவரர்கள்

உலகில் உள்ள கோடீசுவரர்களில் அதிகமானபேர் மலாயாவில்தான் உள்ளனராம்!

இத்தகவலை, மலாயா தொழிலாளர் ஒட்டையைச் சேர்ந்த ஒருவர் கூட்டம் ஒன்றில் பேசும்போது வெளியிட்டிருக்கிறார்.

நடிப்பிசைப் புலவருக்கு வரவேற்பு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

புலவருக்கு அவர்கள் தந்த அந்த வரவேற்பு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

நண்பர் இராமசாமி, கூடியிருந்த அனைவருக்கும் நன்றியும் வணக்கமும் தெரிவித்துக்கொண்டார்.

பின்னர், சுவை இலாகா சோதனை நடத்தப்பட்டு, நடிப்பிசைப் புலவரும், அவரது குழுவினரும் வெளியில் அனுப்பப்பட்டனர்.

குழந்தை

நடிப்பிசைப் புலவர் தன் இனிய மகனை விமான நிலையத்தில் கண்டதும் அதனை வாரி அணைத்துக் கொஞ்சி மகிழ்ந்தார்.

இதற்குள் நடிப்பிசைப் புலவர் மலாயா, சிங்கப்பூர் நாடுகளில் ஆற்றிய மகத்தான கலைப்பணியைப் பாராட்டக் கூடியிருந்தவர்கள் வரிசையாக அணிவகுத்து நின்றனர். அவர்கள் அனைவரும் பெரு மகிழ்ச்சியோடு நடிப்பிசைப் புலவரை வரவேற்று மகிழ்ந்த விபரங்கள் சுருக்கமாகத் தரப்படுகின்றன:—

செங்கற்பட்டு மாவட்டம்:

செங்கற்பட்டு மாவட்டக் கழகச் சார்பில், மாவட்டக் கழகச் செயலாளர் தோழர் இ. ந. சம்பந்தம் அவர்கள் மலர் மாலை சூட்டினார்.

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த இளைக் கழகங்களான, குன்னத்தூர் சார்பில் மன்னன் கட்டனை;செங்கற்பட்டு வட்டச்சார்பில் ஜே. ஏ. வகாப்; உத்திரமேரூர் சார்பில் என். எஸ். மணி ஆகியோரும் வந்திருந்து நடிப்பிசைப் புலவருக்கு மாலை அணிவித்து வரவேற்றனர்.

சென்னை மாவட்டம்:

சென்னை மாவட்டக் கழகச் சார்பில், துணைச்செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவன் அவர்களால் மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

இளைக் கழகங்கள்:

1-வது வட்டச் சார்பில் தோழர் கே. இரங்கராசன், சம்பந்தம்; 2-வது வட்டச் சார்பில் இளஞ்சேரன்; 3-வது வட்டச் சார்பில் டி. முத்துகிருட்டிணன்; 4-வது வட்டச் சார்பில் சேதுராசன்; 8-வது வட்டச் சார்பில் சி. ஆர். பாலசுந்தரம்; 9-வது வட்டச் சார்பில் முத்து, கோவிந்தசாமி, கமால், 11-வது வட்டச் சார்பில் காஞ்சி-மணிமொழியார்; 14-வது வட்டச் சார்பில் இராசமாணிக்கம்; 15-வது வட்டச் சார்பில் ஆனந்தன்; 16-வது வட்டச் சார்பில் பஞ்சாட்சரம்; 17-வது வட்டச் சார்பில் சு. பாலன்; சின்னியப்பன்; 18-வது வட்டச் சார்பில் இ சு. நல்லதம்பி, இ. இளங்கோ; 19-வது வட்டச் சார்பில் இ. நடராசன்; 21-வது வட்டச்சார்பில் தங்கசாமி; 25-வது வட்டச் சார்பில் வளர்மதி; 27-வது வட்டச் சார்பில் இராசன்; 28-வது வட்டச் சார்பில் கோவிந்தசாமி; 29-வது வட்டச் சார்பில் ப. க வேணுகோபால்; 30-வது வட்டச் சார்பில் பா. சு. இறைமுடிமணி; 32-வது வட்டச் சார்பில் ஆர். மாணிக்கம்; 34-வது வட்டச் சார்பில் வையத்தரசு; 37-வது வட்டச் சார்பில் கோ. இளவரசு; 38-வது வட்டச் சார்பில் பத்மநாபன், சிட்டிபாபு; 40-வது வட்டச் சார்பில் தோழியர் அலமேலு - அப்பாதுரை, தாமோதரன்; 41-வது வட்டச் சார்பில் பொன்னுசாமி; 42-வது வட்டச் சார்பில் நீலாராயணன்; 47-வது வட்டச் சார்பில் திருநாவுக்கரசு, இராசன், தங்கராசன்; 48-வது வட்டச் சார்பில் முருகேசன், சைதை அண்ணாமலை; திருவொற்றியூர் வட்டச் சார்பில் வெங்கட்ராமன்; கொடுங்கையூர் வட்டச் சார்பில் மு. கிருஷ்ணமூர்த்தி; ஆல்சுர் வட்டச் சார்பில் பாலன் ஆகியோர் மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிந்தனர்.

மாணவர்கள்:

சென்னை மாநில திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் சார்பில் நகரிலுள்ள பல கல்லூரி மாணவர்கள் நடிப்பிசைப் புலவரை வரவேற்றனர்; மாணவர் இளை அணைப்பாளர் தோழர் பொன்னுவேல் அவர்கள் மலர்மாலை அணிவிக்க ஆரவாரப் பேரொலி எழுப்பினர்.

மகளிர் மன்றம்:

மகளிர் மன்றத்தின் சார்பாகத் தோழியர் சத்தியவாணிமுத்து, கமலா-பாலசுந்தரம், சித்தியா, புவனேசுவரி-நடராசன், வெற்றிச் செல்வி-அன்பழகன், வத்சலா-வேதாசலம், நவநீதம் ஆகியோர் மலர்மாலை அணிவித்து மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

பொது நிறுவனங்கள்:

சென்னை எஸ். வி. அம்பான் கம்பெனி சார்பில் தோழர் டி. கே. சண்முகம், நடிப்பு—இசைப் புலவர் நாடகக் கழகச் சார்பில் தோழர் இரா. சம்பந்தன், முரசொலி பதிப்பகத்தின் சார்பில் தோழர் கிருஷ்ணன், மணிமேகலை பதிப்பகத்தின் சார்பில் டி. கே. மணி ஆகியோர் மாலைகள் அணிவித்து வரவேற்றனர்.

மற்றும் அண்ணா படிப்பகம் (4-வது வட்டம்), சௌந்தரபாண்டியன் படிப்பகம் (17-வது வட்டம்), இளங்கோ படிப்பகம் (18 வது வட்டம்) ஆகியவைகளின் சார்பில் மாலைகள் அணிவிக்கப்பட்டன

1-வது வட்டம் தமிழ் வளர்ச்சி மன்றச் சார்பில் தோழர் த. சம்பந்தம், 'திராவிடன்' அலுவலகச் சார்பில் என். வி. என். சோமு, 11-வது வட்ட இ. மு. கழகச் சார்பில் தோழர் என். இராமதாஸ் 11-வது வட்ட முத்தமிழ் மன்றச் சார்பில் தோழர் இரத்தினசாமி, சூளை கலை வளர்ச்சி நாடக மன்றம் ஆகியவைகள் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

இந்த ஆண்டு தென்னிந்திய விளையாட்டுச் சங்கப் பொருட்காட்சி காண்டிராக்டர் தோழர் எம். எஸ். மோகன் அவர்களும் மலர்மாலை அணிவித்து வரவேற்றார்.

கலைஞர்கள் சார்பில் சினிமா நடிகர் 'பிரண்ட்' இராமசாமி, டி. கே முத்துசாமி ஆகியோர் மாலை அணிவித்தனர்.

மற்றும், எற்றுக்கொண்டு சென்ற கலைப் பணியை செவ்வனே முடித்துத் திரும்பிவந்த புலவருக்கு போளூர்-சுப்பிரமணியம் பெரிய தோரமாலை அணிவித்து வரவேற்றார்.

கடல் கடந்து சென்று அரிய கருத்துக்களைப் பரப்பிவந்த முத்தமிழ் மன்னருக்குத் தோழர் கே. எம். கண்ணபிரான் மலர் மாலை தெரிவித்து மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டார்.

'செய்து வந்த மூன்று மாத முத்தமிழ்ப் பணிக்கு இவ்வளவு பெரும் பாராட்டு' என்று அவர் வியக்கும் வண்ணம் அவர் எழுத்தில் சாரை சாரையாகக் கைத்தறி ஆடைகள், கோர்வையாக மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

மக்கள் வெள்ளம் ஆரவாரிக்க மாலை 7 மணியளவில் கே. ஆர் இராமசாமி அவர்கள் எல்லோருக்கும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு இல்லம் ஏகினார்.

சென்னை கவர்னர்

டிசம்பர் 3-ல் பதவி ஏற்பார்?

புதுடில்லி, நவ. 13—

சென்னை கவர்னராக நியமிக்கப்பட்டுள்ள ஏ. ஜே. ஜான், டிசம்பர் 3-ந் தேதியன்று பதவி ஏற்பார் எனத் தெரிகிறது.

துறைமுகத் தொழிலாளர் ஊதியப் பிரச்சினை

புதுடில்லி, நவ. 13—

துறைமுகத் தொழிலாளர்களின் ஊதியப் பிரச்சினையைப் பரிசீலித்து, அறிக்கை சமர்ப்பிப்பதற்கு செய்தி, ஒலிபரப்பு இலாகா செயலாளர் சொத்தினையை டில்லி ஆட்சியினர் நியமித்துள்ளனர்.

அறிவிப்பு

எஸ். கரிகாலன் டி. கே. ராணி ஆகிய இருவரும் கூட்டாக நடத்திவரும் கலாக் கோஷ்டியினர் தி. மு. கழகத்தின் கண்ணியத்திற்கும் பெயருக்கும் இழுக்கு உண்டாகும் வகையில், கழக மேடைகளில் நின்று மாற்றுக் கட்சியினரை வசை பாடுவதாகச் செய்திகள் கிடைத்திருக்கின்றன. தி.மு.க. இளைஞர்கள் அந்தக் கோஷ்டியினருக்கு எங்கும் ஆதரவு அளிக்கவோ, அவர் களை மேடைமீது ஏற்றவோ வேண்டாம் என்று தலைமை நிலையம் கழகக் இளைஞர் களை புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

சேலம் நகர மாணவர்கட்கு:

'18-11-56 காலை 10 மணிக்கு சேலம் சென்ட்ரல் டாக்கீசுக்கு எதிரே உள்ள வெங்கடப்ப செட்டியார் ரோட்டில் உள்ள சேலம் மாவட்ட தி. மு. கழக அலுவலகத்தில், சேலம் நகர தி. மு. கழக மாணவர் இளைஞர் சார்பில் தேர்தல் நிதி அளிப்பது குறித்து மாணவர் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்"

என்று சேலம் நகர தி. மு. க. மாணவர் இளைஞர் செயலாளர் 'கூட்டர் மணி' அறிவித்திருக்கிறார்.

மதுரை தியாகராசர் கல்லூரியில்

இரா. நெடுஞ்செழியன்

16-11-56 மாலை 4 மணியளவில் மதுரை தியாகராசர் கல்லூரிப் பேரவை மன்றத்தில், கல்லூரிப் பேரவை சிறப்புக் கூட்டம் திரு. ஒளவை சு. துரைசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'இலக்கிய இன்பம்' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

கழகக் கூட்டங்கள்

★

பம்பாய்—தாராவி:

குட்டிவாடித் திடலில்

தி. மு. கழக 7-வது ஆண்டு விழா

16—11—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:

த. மு. பொற்கோ

வரவேற்புரை:

பி. எஸ். எஸ். பாண்டியன்

கொடியேற்றுபவர்:

எஸ். தியாகராசன்

பேசுபவர்:

டி. கே. சீனிவாசன்

★

உதயநத்தம்:

15—11—56 மாலை 5 மணிக்கு

தலைவர்:

துரை. இராமகிருட்டிணன்

பேசுவோர்:

அன்பில்-தருமலிங்கம்

எம். எஸ். மணி

ஏ. முருகேசன்

எம். இளங்கோ

தமிழக அமைப்பு நாள் விழா

15-11-56 மாலை 6 மணிக்கு சென்னை 16-வது வட்டம் தி. மு. கழகப் பணிமனையில் தோழர் ஆசைமுத்து தலைமையில் நடைபெறும்; தோழர்கள் வ. பா. சின்னையா, சி. பஞ்சாட்சரம், எஸ். கோபால், போளூர்-பத்மநாபன், டி முத்து ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

தி. மு. க. பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

"போலீஸ் அனுமதி கிடைக்காத காரணத்தால, 12-11-56-ல் சென்னை—வியாசர்பாடியில் நடைபெற இருந்த கழகப் பொதுக்கூட்டம் 17-11-56-க்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது" என்று அறிவிக்கப்படுகிறது.

சொற்பயிற்சிக் கூட்டம்

15-11-56 மாலை 7 மணிக்கு சென்னை 16-வது வட்டம் திருவள்ளுவர் முன்னேற்றக் கழக இல்லத்தில் தோழர் வாசு தலைமையில் 'கழகம்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர். தோழியர் எம். ஆர். லீலா, ஞானசுந்தரி ஆகியோர் இயக்கப்பாடல் பாடுவர். தோழர் செ. சி. வாசன் பரிசு வழங்குவார்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை பெறும் பங்கு

மண்பாண்டம் உற்பத்திக்கு டில்லி கடன் தருகிறதாம்

புதுடில்லி, நவ 12—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சென்னையில் குறிப்பாகவும், பொதுவாகத் தென்னாட்டிலும் அமையும் மிகப் பெரிய தொழில்கள் என்ன தெரியுமோ?

முன்பு சென்னையில் அப்பளத் தொழிற்சாலை ஒன்று தவக்குவதற்காக டில்லி சில ஆயிரம் ரூபாய் கடன் தந்திருப்பதாகச் செய்தி வந்தது.

இப்போது சென்னையிலும், மைசூரிலும் மண்பாண்டங்கள் உற்பத்தி செய்வதற்கான தொழில் நிலையம் நிறுவ டில்லி கடனுதவும் மானியமாகவும் சில ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறதாம்.

சென்னைக்கு ரூ. 45,000 இதற்காகக் கிடைக்குமாம்.

மிக முக்கியமான கிராமத் தொழிலான இந்த மண்பாண்ட உற்பத்தித் தொழிலுக்குப் புத்துயிர் அளிக்க அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொள்கிறதாம்.

குறைவும் - உயர்வும்!

புதுடில்லி, நவ. 13—

சென்னை மாநிலத்தில் இதுவரை 1,123 லாப நோக்கு விலைக் கடைகள் அரசாங்கத்தாரால் திறக்கப்பட்டுள்ளனவாம்.

பம்பாயில் 3,797 லாப நோக்கு விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளனவாம்.

தொழிலாளியை வேலையிலிருந்து நீக்கியதற்கு எதிர்ப்பு

சென்னை, நவ. 13—

ஒரு தொழிலாளியை வேலையிலிருந்து நீக்கியதைக் கண்டித்து, 'செஞ்சுரி மாவு ஆலை'யைச் சேர்ந்த 60 தொழிலாளர்கள், இன்று வேலை நிறுத்தம் செய்தனர் என்று தெரியவருகிறது.

அமெரிக்கா செல்வாராம்!

பண்டித நேரு இன்னும் ஆறு வாரங்களில் அமெரிக்காவுக்குச் செல்லக்கூடும் என்று தெரியவருகிறது.

காவல் கைதிகள் விடுதலை

புதுடில்லி, நவ. 13—

ஜம்மு-காஷ்மீர் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் சிறையிடப்பட்டுள்ள அப்துர் ஜாபர்பட், அப்துல் ஹக் பாண்டே இருவரையும் உடனே விடுதலை செய்யுமாறு சுப்ரீம் கோர்ட் கட்டளையிட்டுள்ளது.

வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்

திருவனந்தபுரத்தில் இளை உயர் நீதிமன்றம் கோரி நடவடிக்கை

திருவனந்தபுரம், நவ. 13—

கேரள மாநில உயர் நீதிமன்றத்தின் நிரந்தரக் கிளை ஒன்றினை திருவனந்தபுரத்தில் திறவவேண்டும் என்று கோரி, இன்று நகர நீதிமன்றங்களின் முன்கூடி, வழக்கறிஞர்கள் மறியலில் ஈடுபட்டு ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு, திரு-கொச்சியின் முன்னாள் (காங்கிரஸ்) முதன் மந்திரியான டி. கே. நாராயண பிள்ளை தலைமை தாங்கியிருக்கிறார்.

கருப்புச் சின்னங்கள் அணிந்த இளம் வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களைச் சுற்றிவந்து, தங்கள் கோரிக்கைகளைக் கோஷங்களாக ஒலித்தனர் என்று தெரியவருகிறது.

தூதுக் குழு

இதற்கிடையில், பட்டம் தாணுப் பிள்ளை தலைமையில், (முன்னாள் பி. சோ. முதன் மந்திரி) குடியரசுத் தலைவர், டில்லி சர்க்கார் ஆகியோருக்கு இந்தக் கோரிக்கையை வலியுறுத்துவதற்காக ஒரு குழு சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

நவம்பருக்குமுன் திருவனந்தபுரத்தில் இருந்த இளை நீதிமன்றத்தைத் தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்பதே கோரிக்கை என்று, பட்டம் தாணு பத்திரிகையாளரிடம் கூறினாராம்.

போரின் பரிசு!

லண்டன், நவ. 12—

'எகிப்தில் பிரிட்டன் மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாகப் பிரிட்டிஷ் பொதுமக்கள் எண்ணெய்க்காக அதிகப்படியாக 20 கோடி அல்லது 30 கோடி டாலர் செலவழிக்க நேரிடக்கூடும்' என்று தொழிற் கட்சிப் பிரமுகர் வில்சன் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட எகிப்து

சவூதி அரேபிய மன்னர் உதவித் தொகை

லண்டன், நவ. 12—

போர்ட் செயித் துறைமுகத்தைத் திரும்ப உருவாக்குவதற்காக சவூதி அரேபிய மன்னரான சாவூத், எகிப்திய சர்க்காருக்கு 2 இலட்சம் (எகிப்திய) பவுன் அன்பளிப்புத் தந்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தத் தொகை, பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு உதவுவதற்கும் செலவிடப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

எகிப்துக்கு அரபுத் தலைவர்களின் ஆதரவு

புதுடில்லி, நவ. 13—

பெய்ரூத்தில் நடைபெற்ற அரபு நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் எகிப்துக்குப் பரிபூரண ஆதரவைத் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐ. நா. பார்வையாளருக்கு ஹங்கேரி மறுப்பு

வியன்னா, நவ. 12—

ஹங்கேரிக்குள் நிலைமை எப்படியிருக்கிறது என்பதைக் காண்பதற்குப் பார்வையாளர்களை அனுமதிக்க முடியாதென ஹங்கேரி அரசாங்கம் அறிவித்து விட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.